**செய்தி வெளியீடு எண்:371** **நாள்: 13.06.2017**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (13.6.2017) தலைமைச் செயலகத்தில், மின்சாரம் தாக்கி உயிரிழந்த காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், ஈச்சங்கரணை கிராமத்தைச் சேர்ந்த திரு. மாயக்கண்ணன், செய்யூர் வட்டம், பவுஞ்சூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கோவிந்தராஜ் மற்றும் செங்கல்பட்டு வட்டம், காட்டாங்கொளத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.கே. சேகர் ஆகியோரது மனைவிமார்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 3 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும், கடலில் மீன்பிடிக்கும் போது படகு கவிழ்ந்து உயிரிழந்த திருக்கழுக்குன்றம் வட்டம், மெய்யூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.ஆறுமுகம் மற்றும் செய்யூர் வட்டம், கடப்பாக்கம் குப்பத்தைச் சேர்ந்த திரு.வேலு ஆகியோரது மனைவிமார்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 1 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை உயிரிழந்தவர்களின் மனைவிமார்களுக்கு வழங்கினார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 13.6.2017**